உ

ஸ்ரீராமஜெயம்

# வசந்தத்தின் வாழ்வேடு



அமரர்

## இராமசாமி வசந்தகுமார்

அவர்களின்

## நினைவு மலர்

24.09.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சமர்ப்பணம்

எங்களின் வாழ்வுக்கும்
வளர்ச்சிக்கும்
மெழுகுவர்த்தியாக இருந்து
தன்னையே உருக்கி
ஒளியூட்டிய எங்கள்
ஆருயிர்த் தெய்வத்தின்
இனிய நினைவுகளை
எங்களின் உதிரங்களில்
சுமந்த வண்ணம்
இம்மலரை
அவரின் தாள்களுக்கு
அர்ப்பணிக்கிறோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வசந்தனாக
26.10.1961

இறைவசத்தில்
25.08.2003

வசந்தமாக
42 வருடங்கள்

அமரர்

# இராமசாமி வசந்தகுமார்

## திதிவெண்பா

ஆண்டு சுபானு ஆவணித் திரயோ தசியில்
மாண்டவத்து இராமசாமி மைந்தனாம்-நீண்டபுகழ்
வசந்தகுமார்ப் பெரியோன் வைகினான் ஈசனடி
இசைந்ததுவே பேரின்பப் பேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப்பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## சம்பந்தர் தேவாரம்

திருஞான சம்பந்தமுர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

### முதலாந்திருமுறை

தலம்-திருச்சிராப்பள்ளி பண்- குறிஞ்சி இராகம்: அரிகாம்போதி

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொரு பாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூற வென்னுள்ளங் குளிருமே

## அப்பர் திருத்தாண்டகம் பொது

இராகம்: அரிகாம்போதி

தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
தாரமார் புத்திரார் தாத்தா மாரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமா மிதற்கேதும் மகிழ வேண்டா
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ் மதியும் வாளரவும் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
என்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்கலாமே

## சுந்தரர் தேவாரம்

தலம்: திருப்புன்கூர் பண்: தக்கதேசி இராகம்: காம்போதி

அந்தணாளனுன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன்றன் ஆருயிரதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மை கண்டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன் மற்றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடியடைந்தேன்
செழும் பொழில் திருப் புன்கூருளானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசகர் திருவாசகம்

வெள்ளந்தாழ் விரி சடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்கு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மேலாகப்
பதைத்துருகு மவர் நிற்க என்னை யாண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணினையும் மரமாம் நீ வினையினேற்கே

## கருவூர்த்தேவர் திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத்தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## சேந்தனார் திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே

## சேக்கிழார் பெரியபுராணம்

மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவக் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்ணையாமெனில் உலகர் முன் வருகென உரைப்பார்

திருச்சிற்றம்பலம்.

## அருணகிரிநாதர் திருப்புகழ்

காலனிடத்தணுகாதே காசினியிற் பிறவாதே
சீலவகத்திய ஞான தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியோனே மாதவரைப் பிரியோனே
நாலுமறைப் பொருளோனே நாதகிரிப் பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரரின் வாழ்க்கை வரலாறு

ஈழத்திருநாட்டில் வளம் சூழ் வடபுலத்தில் அமைந்த யாழ் நகரின் தொல்புரம் எனும் கிராமத்தில் வாழ்ந்த இராமசாமி பூரணவல்லி தம்பதிகளின் தவப்பேற்றால், 1961 ஆண்டு ஐப்பசி மாதம் 26ஆம் திகதி முதலாவது புதல்வனாக வசந்தகுமார் பிறந்தார். இவரைச் செல்லமாக "வசந்தன்" என எல்லோரும் அழைத்தனர். இவரது அழகான தோற்றப் பொலிவும், புன்சிரிப்பும் இவரது பெயருக்கு இலக்கணம் வகுத்தன. இவரைத் தொடர்ந்து, திருமலர்ச்செல்வி, மதியழகன், திருவருள் ஆகியோர் பிறந்தார்கள். தனது சகோதரர்களுடன் மிகவும் பாசத்தோடு இருந்து வந்தார் வசந்தன் அவர்கள். இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்றார். தொடர்ந்து தனது உயர் கல்வியை யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிற் கற்று க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஒரே தடவையில் திறமைச் சித்தி எய்தி, க.பொ.த உயர்தரத்திற்குத் தகுதி பெற்று, வணிக பாடத்தை விரும்பிக் கற்றார். பாடசாலையில் தனது திறமைகளை வெளிக்காட்டிப் பல மன்றங்களுக்குத் தலைமை தாங்கியதோடு மட்டுமன்றி, நாடகங்கள் பலவற்றிலும், வாதாடும் சொற்திறமையால் பட்டிமன்றங்கள் பலவற்றிலும் பங்குபற்றிப் பலரது பாராட்டுக்களையும், பரிசில்களையும் பெற்றார். வசந்தன் அவர்களிடம் அழகான எழுத்தாற்றலும் இருந்தது. இவரது எழுத்தாற்றற் திறமையால், இவருக்கு சிறந்த ஒரு தொழில் வாய்ப்புக் கிடைத்தது.

தனியார் கல்வி நிறுவனமான "நியூமாஸ்ரர் சயன்ஸ் இன்ஸ்ரிரியூட்" என்னும் கல்வி நிறுவனத்தில் தனது எழுதுவினைஞர் பணியைச் செய்து வரும் வேளையில், தனது 24ஆவது வயதில் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலம் கதிரவேலு, கிருகாம்பிகை தம்பதிகளின் இரண்டாவது புதல்வியான கலாமதியை, யாழ்ப்பாணத்தில் தனது நண்பரது திருமண வீட்டிற்குச் சென்றிருந்த வேளையில், இறைவன் திருவுளத்தால் சந்திக்க நேர்ந்தது. கலாமதியின் அருமையான குணப்பண்புகளையும், குலத்திற்கு குத்துவிளக்காக இருப்பவள் என்பதையும் அறிந்து நேசிக்க ஆரம்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


"அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" என்னும் வாக்கிற்கிணங்க இருவரும் ஒருவரை ஒருவர் நேசித்து 1985ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டனர். இல்லற வாழ்க்கையில் சிவன் உமையாக ஒருவரை ஒருவர் புரிந்து மிகுந்த அன்புடன் வாழ்ந்து வருகையில், இவர்களின் முதலாவது அன்பின் சின்னமாக 1986ஆம் ஆண்டு பெண் பிள்ளையைப் பெற்று துசாந்தி (துசி) எனும் பெயர் சூட்டி மகிழ்வடைந்தனர். சிறிது காலத்தின் பின் இரண்டாவது புதல்வனாக 1988ஆம் ஆண்டு பிரசாந்தையும் (சாந்தன்)தொடர்ந்து 1990ஆம் ஆண்டு தனுசாந்தியையும் (தனு) 1991ஆம் ஆண்டு கபில்சாந்தையும் (கபில்) 1993ஆம் ஆண்டு அமரர் லக்சாயினியையும் (சாயினி) பெற்றெடுத்து மகிழ்வுடன் வாழ்ந்தார். கடைக்குட்டியின் செல்வாக்கால் 1994ஆம் ஆண்டு சித்தன்கேணியிலுள்ள 'சுப்றா' கல்வி நிறுவனத்தைப் பொறுப்பேற்று மிகச்சிறந்த முறையில் நிர்வாக இயக்குனராக இயங்கி, மாணவர்களுக்கு வேண்டிய கல்வியை மட்டுமன்றி, அறிவுரைகளையும், நற்பண்புகளையும் வழங்கி ஊக்குவித்தார்.

சமுதாயத்தில் மிகுந்த மதிப்புடன் மிளிர்ந்ததுடன் மிகுந்த செல்வத்துடனும், குடும்பத்துடன் சந்தோஷமாகவும் வாழ்ந்து வரும் வேளை, கெஞ்சினாலும் கிடையாத 5ஆவது செல்வமகள் லக்ஷாயினியை 6 வயதிலேயே விதிவசத்தால் காலன் கவர்ந்து சென்றான். ஆதனால் மிகுந்த கவலைகள் மனதில் இருப்பினும் அதனை வெளிக் காட்டிக் கொள்ளாது மனைவியதும், பிள்ளைகளதும் ஆறாத் துயரத்தை ஆற்றி, ஆறுதல் கூறி குடும்பத்திற்காக அயராது உழைத்தார். யாழ்ப்பாணம், "நியூ சயன்ஸ் ஹோல்" என்னும் தனியார் கல்வி நிறுவனத்தில் நீண்ட காலமாக எழுதுவினைஞர் கடமையையேற்று, "சயன்ஸ் ஹோலின் வலது கையாக மட்டுமன்றி "சயன்ஸ் ஹோலை" தனது குடும்பமாகவும், கல்வி கற்கும் மாணவர்களைத் தனது பிள்ளைகளாகவும் நினைத்து அறிவுரை வழங்கி, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, என்னும் அறிஞர் அண்ணாவின் கூற்றினை ஏற்று செயலாற்றினார்.

வீட்டுப் பொறுப்புக்களாலும், தனக்கென ஒரு இல்லிடம் இல்லாமையாலும் கவலையடைந்த வசந்தன் அவர்கள் →

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்வாய்ப்பட்டார். இதனால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். அச்சிகிச்சை பலனளிக்காமையினால் தொடர்ந்து கொழும்பு "டெல்மன்" வைத்தியசாலையில் இரண்டு மாதகாலமாகச் சிகிச்சை பெற்றார். நோய் அவரது உடலை மிகவும் வாட்டியது. "நல்லவர்கள் மண்ணுலகில் வாழ்வதை விட விண்ணுலகில் வாழ்வதைத்தான் இறைவன் விரும்புவான்" என்ற பகவத் கீதையில் கிருஷ்ணபரமாத்மா அருச்சுனனுக்குப் போதித்தது போல, 2003 ஆவணி மாதம் 25ஆம் திகதி மனைவி, மக்கள், சகோதரர், உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் கலங்க இறைபதம் எய்தினார்.



## திருக்குறள்

"ஒரு பொழுதும் வாழ்வு தறியார் கருதுவ
கோடி மல்ல பல"

குடம்பை தனித்தொழியப் புட்பறக்தற்றே
உடம்போடுயிரிடை நட்பு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனமுடைந்து போனேனே என் அருமை மருமகனே

தம்பியே வசந்தகுமார் தரணியிலே – உன்னை நம்பி
இன்போடு நானிருந்தேன் ஐயாநீ ஏகினையோ
எம்பிரான் தன்னருளால் என்னையுமே காத்து நின்றாய்
வெம்பியின்று அழுகின்றேன் வேதனைகள் தீர்ப்பார் யார்
அன்பான சகோதரனின் அருமைமகன் நீயெனக்கு
துன்பேதும் செய்யாது துணையாக நின்றாயே
என்போலும் பாவியர்கள் யாருள்ளார் உலகினிலே
பொன்போலும் உன்மேனி போனதிசை அறியேனோ

திருமதி.கந்தையா பாக்கியம்,
நெல்லியான்,
சுழிபுரம்

## எமக்கு மேலுமோர் பேரிழப்பு

"நெருநல் உளலொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்த இவ்வுலகு"

"பலருக்கு வாழ்வு மரணமாகின்றது, சிலருக்கு மரணம் வாழ்வாகின்றது" இது ஆன்றோர் கூற்று. மரணித்தும் வாழ்பவன் நாம் நயக்கும் நல்ல மனிதனே. இவ்வரிசையில், அமரர் சுழிபுரம் ஸ்ரீமான் இராமசாமி வசந்தகுமாரனின் மறைவு ஒன்றாகும்.

எமது கல்வி நிலையத்தில் சென்ற மூன்றாண்டுகளில் நிகழ்ந்த திடீர் மறைவுகளில் இவரின் மறைவு மூன்றாவதாக அமைகின்றது. அவரின் மறைவுக்கு முன்னர் எமது இருபெரும் ஆசான்களை நாம் இழந்துள்ளோம். அத்துயரம் மறையமுன்னர் அமரர் வசந்தனின் மறைவு ஏற்பட்டு விட்டது.

அமரர் ஸ்ரீமான் வசந்தகுமாரன் தனது சேவையைப் பத்து ஆண்டுகள் பூர்த்தி செய்யும் முன்னரே தமது 42ஆம் வயதில் தமது பாசமுள்ள இளம் மனைவியையும் பற்றான பிள்ளைகளையும் விட்டு →

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணகம் விரைந்தமை எமக்குப் பெரும் துயரத்தை அளித்த நிகழ்வாகும்.

மிகுந்த கண்ணியத்துடனும், விசுவாசத்துடனும் எமது நிலையத்தில் 10 ஆண்டுகளிற்கு மேல் சிறந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றி, எல்லோருக்கும் நல்லவனாய், எவரும் போற்றும் வல்லவனாய், பலருக்கும் பலன் கருதாது பணியாற்றிய பண்பாளனாய் வாழ்ந்த ஒரு மனிதனே அமரர் ஸ்ரீமான் வசந்தகுமார் ஆவார். அவருக்கு விண்ணக வாழ்வு விரைந்து வந்ததை எம்மாலும், ஏன் எவராலுமே ஜீரணிக்க முடியாது. நொந்து பயனில்லை. எமது நிலையம் ஒரு தரமான அலுவலக உதவியாளரை இழந்து விட்டது. அவரின் குடும்பம் அதன் மூலவேரைப் பறிகொடுத்து விட்டது.

**அமரர் நண்பன் ஸ்ரீமான் இராமசாமி வசந்தகுமாரின் விண்ணக வாழ்வு, சிறப்புடன் படைத்தவன் பாதத்தில் பேரின்பச் சாந்தி பெற நாமும், அமரரின் பற்றான மனைவி, பிள்ளைகள், சகோதரர், உற்றார், உறவினருடன் இணைந்து பிரார்த்திப்போமாக**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
08.09.2003.

இ. அருட்செல்வன்
இயக்குனர்,
மற்றும் ஆசிரியர்கள்,
அலுவலர்கள், மாணவ மணிகள்,
புதிய விஞ்ஞானக் கழகம்/ கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தமே வசந்தன்

சுழன்று வரும் குவலயத்தின் உள்ளே சுற்றிடும் வாழ்க்கைச் சக்கரத்தில் மானிடர் நாம் வந்து சிலநாள் தங்கிச் செல்கின்றோம். கால வட்டம் முடிந்ததும் காலதேவன் வந்து அழைக்கின்றான். இது வாழ்வின் நியதி. எமது வாழ்நாளில் பிறந்தோம். வாழ்ந்தோம். இறந்தோம் என்று இருப்பதை விட எதைச் சாதித்தோம் என்பதே மேல்.

அந்த வகையில் திரு. இ. வசந்தகுமார் அவர்கள் ஒரு மானிட விருட்சம் எனலாம். தனியார் கல்வி நிறுவன ஒன்றியத் தலைவனாய், சுப்றா கல்வி நிலைய உரிமையாளனாய், வர்த்தக சங்கப் பிரதிநிதியாய், கிராமத் தொண்டனாய், நட்பின் இலக்கணமாய், துடிப்பான, அழகனாய், வாழ்ந்தார். உதவி புரிவதில் அவருக்கு நிகர் அவரே. தானே முன்நின்று மடித்துக் கட்டிய வேட்டியுடன் எல்லாப் பொது வேலைகளிலும் முன் நிற்பார். நட்புக்காக மெழுகுவர்த்தி போல வாழ்ந்தார். அமைதியான சுபாவம், புன் சிரிப்பு, சிறிய தலைஅசைவு, இத்தனையும் போதுமே நெல்லியான் கிராமத்துக்குப் பல கதைகள் கூறும் அவரின் நகைச்சுவைப்பாணி. இத்தனையும் அனுபவிக்க எமது கிராமம் கொடுத்து வைக்கவில்லை. இருந்தும், வாழ்நாளில் வசந்தம் வீசிய வசந்தனின் வாரிசுகள், எனது இனிய மாணவச் செல்வங்கள், அவர் பணியைத் தொடர்வார்கள் என நம்புகின்றேன்.

வசந்தனின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றேன்.

க.மனோகர் J.P,
ஆசிரியர், நிர்வாகி,
றெமிங்ரன் கல்விவளர் சோலை.

மூளாய், சுளிபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தன் மாமாவின் வரலாற்றை நோக்கி!

வாடாத வசந்தன் மாமா வாடிய செய்தி கேட்டு ஒரு கணம் அதிர்ந்து நின்றேன். எங்கள் வசந்தன் மாமாவின் பிரிவு நிஜமா கனவா என்று பிரித்துப் பார்க்க முடியாத நிலையில், 25.08.2003 திங்கட்கிழமை மாலை 7 மணி 05 நிமிடம் அளவில் எனது நிலைப்பாடு அது. ஏனென்றால், வசந்தன் மாமா கொழும்பில் இருந்து எங்களோடு பிரிந்து எண்ணி எட்டு நாள் ஆகும் முன்னர் இந்தச் துயரச் சம்பவம் நிகழும் என்று நான் கனவிற் கூட நினைக்கவில்லை. அதற்காக மனித விதியையும் எம்மால் வெல்ல முடியாது. ஏனென்றால் யதார்த்தத்தின் மனித வாழ்க்கை நடைமுறை பயன்படுவது போன்ற நடைமுறையை ஒத்தது. ஆண்டவன் ஆனால் அவரவர் உரிய நேரத்தில் வாகனத்தில் அனுப்பி வைப்பான். அதை எம் ஒருவராலும் தடுக்கவோ நிறுத்தவோ முடியாது. இந்த உதாரணத்திற்கு அமைய, எதற்கும் முந்தி நிற்கும் எங்கள் வசந்தன் மாமா இதனையும் விட்டு வைக்காமல் சொர்க்கலோகத்திற்கும் முந்தி சென்று விட்டார்.

இன்றுடன் வசந்தன் மாமாவைப் பிரிந்து சென்று நாட்கள் 31 ஆகிவிட்டன. என்னைப் பொறுத்தவரை ஆண்டுகள் 31 ஆகினாலும், ஏன் நூற்றாண்டு 31 ஆகினாலும் அவரை என்னால் மறக்க முடியாது. சுருண்ட முடியும். வளைந்த மீசையும், இனிய கதையும், நேரிய பார்வையுடனும் நெல்லியான் வீதியில் உலாவரும் எங்கள் வசந்தன் மாமாவை யார்தான் விரைவில் மறப்பர். அவருடைய கொள்கைகளும், திட்டமிட்ட புத்திசாலித்தனமான பேச்சுக்களும், சமுதாயத்திலும், மாணவர்கள் மத்தியிலும் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அப்படியான வசந்தன் மாமாவை, அவருடைய இன்பதுன்பம் என்ன என்பதை, அவருடைய வரலாற்றை நோக்கி, அவருடைய ஆத்ம சாந்திக்காக எல்லோரும் பிரார்த்திப்போமாக.

ஓம்சாந்தி! ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!!!

கொழும்பு.
24.09.2003.

இங்ஙனம்,
V.K முகுந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SUBRA கல்வி நிறுவனம்
## சித்தன்கேணி.

இயக்குனர்,
எஸ். ஐங்கரன் B.A (Hons) Geo-spe.
(ஆசிரியர்- உடுவில் மகளிர் கல்லூரி,
பகுதி நேர விரிவுரையாளர், பட்டப்படிப்புகள் பிரிவு)
தொ.பே. 070-213469.

எமது நிறுவனத்தின் முன்னாள் இயக்குனரும், முன்னாள் வலிமேற்கு தனியார் கல்வி நிறுவனங்களின் தலைவரும், இன்று கல்லறையில் பூத்துச் சிரிக்கும் திரு.இராமசாமி வசந்தகுமார் எம் இருதயங்களில் ஆறாத காயத்தை உருவாக்கிச் சென்றுவிட்டார்.

அன்னார் வாழ்ந்த காலங்களில், அன்னாரின் புன்சிரிப்பு எல்லோரையுமே கவர்ந்து விடும். வள்ளுவன் கூற்றுக்கு இணங்க

" வையத்து வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்தினுள் வைக்கப்படும்"

திரு. இ. வசந்தகுமார் நன்கு வாழ்ந்து நல் மனையாளையும், நன் மக்கட் பேறுகளையும் பெற்று இன்று வானுறையும் தெய்வமாகிவிட்டார். அன்னாரின் இழப்பு அவரது குடும்பத்தினரை மட்டுமல்ல, கல்வி சமூகத்திற்கே மாபெரும் இழப்பாகும். இந்த இழப்பை ஈடு செய்யவே முடியாது.


அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்
பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

சதாசிவம் ஐங்கரன்,
இயக்குனர் சுப்றா கல்வி நிறுவனம்,
தலைவர், வலிமேற்கு தனியார்-
கல்வி நிறுவன ஒன்றியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் இல்லற ஜோதியும் குல தெய்வமுமாகிய அமரர் இராமசாமி வசந்தகுமார் அவர்களின் இறுதிக்கிரியைகளின் போது, நேரிற் கலந்து கொண்டும், கடிதம், தொலைபேசி, தந்தி, கண்ணீர் அஞ்சலிகள் மூலமாகவும், மலர்மாலைகள், மலர்வளையம் மூலமாகவும் அஞ்சலி செலுத்தி, எமது துயரிற் பங்கு கொண்டு எமக்கு ஆறுதலளித்த அன்பர்கள், நண்பர்கள், பாடசாலை மாணவர்கள், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும், **New science hall and New science college** இயக்குனர், ஆசிரியர்கள், அங்கத்தவர்கள், அனைவருக்கும் அஞ்சலி உரை நிகழ்த்திய குறிப்பாக, **New science Hall** ஆங்கில ஆசிரியர் பஞ்சாட்சரம் அவர்கட்கும், சுப்றா கல்வி நிறுவன இயக்குனர் திரு. ஐங்கரன் ஆசிரியர் அவர்கட்கும், றெமிங்ரன் கல்வி நிறுவன நிர்வாகி திரு மனோ மாஸ்ரர் அவர்கட்கும் மற்றும் சங்கீத பூஷணம் திரு.சு.கணபதிப்பிள்ளை அவர்கட்கும், பண்டிதை திருமதி.பொன்.பாக்கியம் அவர்கட்கும் மற்றும் எமது தோளோடு தோள் நின்ற எமது உற்றார், உறவினர் நண்பர்கட்கும் எமது உள்ளங் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.



இங்ஙனம்,
குடும்பத்தினர்.

பிரதான வீதி,
சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்
பகவான் ஸ்ரீ கிருஷ்ணா



ஸ்ரீவிநாயகர் கிராபிக்ஸ், பண்ணாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org